# இணைய வழி மூலம் இறுதி பருவத் தேர்வு

இறுதிப் பருவத் தேர்வுகளை இணையவழியில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக உயர்கல்வித்துறை அமைச்சர் அன்பழகன் கூறுகையில் –

பல்கலைக்கழக, கல்லூரி இறுதிப் பருவத் தேர்வுகள் இணையவழி மூலமும் நடத்தப்படும். இணையவழியில் தேர்வெழுதுவதா அல்லது நேரில் வந்து தேர்வெழுத வேண்டுமா என்பதை அந்தந்தப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளே முடிவு செய்துகொள்ளலாம்.

வெளிமாநிலங்கள், வெளிநாட்டில் வசிக்கும் மாணவர்களுக்காக இணையவழியில் தேர்வுகள் நடத்தப்படும். பிற மாணவர்களுக்கு நேரடியாக எழுத்துத் தேர்வு நடைபெறும்.

தனிமைப்படுத்தல் முகாம்களாகச் செயற்பட்டு வரும் கல்லூரிகளில் தேர்வுகள் நடத்தப்படக் கூடாது. இதற்குப் பதிலாக பிற கல்லூரிகளில் தேர்வு மையம் அமைக்கலாம். இதற்கான விரிவான தேர்வு அட்டவணை மற்றும் தேர்வு மையங்கள் விரைவில் வெளியிடப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இறுதி பருவத் தேர்வுகள் அனைத்தும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள் நடத்தப்பட வேண்டும் என யு.ஜி.சி உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் மோடிக்கு கொலை மிரட்டல்!



பிரதமர் நரேந்திர மோடிக்கு வெளிநாட்டில் இருந்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கான பாதுகாப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கையில் –

கடந்த 8ஆம் திகதி என்.ஐ.ஏ.இ ஈ.மெயில் முகவரிக்கு பிரதமர் மோடி கொலை செய்யப்பட வேண்டும் என்ற வாசகங்களுடன் மெயில் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனையடுத்து பிரதமரின் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என எஸ்.பி.ஜி.இ பாதுகாப்பு படைக்கு உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

அந்த மெயில் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க உளவுத்துறை உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் முதற்கட்ட விசாரணையில் வெளிநாட்டிலிருந்து அந்த மெயில் அனுப்பப்பட்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 40 லட்சத்தை அண்மிக்கும் கொரோனா தொற்றாளர்கள்!

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 40 லட்சத்தை நெருங்கியுள்ளது.

இதன்படி நேற்று (வியாழக்கிழமை) ஒரே நாளில் 84 ஆயிரத்து 156 பேர் புதிய தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 39 லட்சத்து 33 ஆயிரத்து 124 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் ஒரே நாளில் ஆயிரத்து 83 பேர் உயிரிழந்துள்ள நிலையில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 68 ஆயிரத்து 569 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 30 லட்சத்து 34 ஆயிரமாக அதிகரித்துள்ள நிலையில், 8 லட்சத்து 29 ஆயிரம் பேர் தொடர்ந்தும் சிகிச்சைப்பெற்று வருகின்றனர்.

இவர்களில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் நிலை கவலைக்கிடமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவுடனான எல்லைப் பிரச்சினை போர் வாய்ப்புக்களை உருவாக்கும்!

## அச்சம் வெளியிடுகிறார் இராணுவத் தளபதி



சீனாவுடனான எல்லைப் பிரச்சினை அணுவாயுதம் உள்ளிட்ட வழக்கத்திற்கு மாறான போர் வாய்ப்புக்களை உருவாக்கிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக இந்திய இராணுவத் தளபதி பிபின் ராவத் அச்சம் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா மற்றும் இந்தியாவிற்கு இடையிலான இராணுவ ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டத்தில் காணொலிக் காட்சி வழியாக கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர் –

தற்போது சீனாவுடனான எல்லைப் பிரச்சினை மிகவும் சிக்கலானதாக உள்ளது. பிரச்சினை மிகவும் தீவிரமாக உள்ளது. அணு ஆயுதம் உட்பட வழக்கத்துக்கு மாறான போர் வாய்ப்புக்களை உருவாக்கிவிடுமோ என்ற அச்சத்தை தற்போதுள்ள சூழ்நிலை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை இல்லாத அளவுக்கு சீனா தற்போது மிகவும் மூர்க்கதனமாக நடந்து கொண்டு வருகிறது.

அதே நேரத்தில் சீனாவின் இந்த விமத்தனத்தை எப்படி முறியடிக்க வேண்டும். நம் எல்லையை எப்படி பாதுகாக்க வேண்டும் என்பது நம் இராணுவத்துக்குத் தெரியும்.

இந்தியா – சீனா இடையேயான இந்தப் பிரச்சினைக்கு இடையே மற்றொரு அண்டை நாடான பாகிஸ்தான் விபரீத நடவடிக்கைகளில் ஈடுபட முயற்சிக்கலாம். அவ்வாறு முயற்சித்தால் பாகிஸ்தான் கடுமையான இழப்பைச் சந்திக்க நேரிடும். இதை முந்தைய அனுபவங்களில் இருந்து பாகிஸ்தான் உணர்ந்திருக்கும் என நம்புகிறேன். – எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சீனா தற்போது தங்களிடம் இருக்கும் அணுவாயுதங்களை இரட்டிப்பாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக பென்டகன் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொதுச் செயலாளர், பொருளாளர் தி.மு.கவுக்கு போட்டியின்றி தெரிவு

தி.மு.க.வின் பொதுச் செயலாளராக துரைமுருகனும் பொருளாளராக டி. ஆர்.பாலுவும் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதில் மேற்படி இரு பதவிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டவர்கள் கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவர்.

தி.மு.க.வில் பொதுச் செயலாளர் க.அன்பழகனின் மறைவுக்குப் பின்னர், அந்தப் பதவிக்கான வெற்றிடம் நிலவியதுடன் பொருளாளர் பதவிக்கான தெரிவிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தி.மு.க.வில் பொதுச்செயலாளர், பொருளாளர் பதவிக்கு போட்டியிட விரும்புபவர்கள் அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனு பெறலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி நேற்றுமுன்தினம் பொதுச் செயலாளர் பதவிக்கு துரைமுருகன் பெயரிலும், பொருளாளர் பதவிக்கு டி.ஆர்.பாலு பெயரிலும் விண்ணப்பங்கள் எடுக்கப்பட்டன.

இதையடுத்து நேற்று காலை அண்ணா அறிவாலயத்தில் வேட்புமனுக்கள் பெறப்பட்ட நிலையில் பொருளாளர் பதவிக்கு டி.ஆர். பாலுவும் பொதுச்செயலாளர் பதவிக்கு துரைமுருகனும் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

இந்தசூழலில் நேற்று மாலை 4 மணியுடன் வேட்புமனுத்தாக்கல் முடிந்த நிலையில் வேறு யாரும் மனுத்தாக்கல் செய்யவில்லை.

இதன்படி, தி.மு.க. பொதுசெயலாளராக துரை முருகனும், பொருளாளராக டி.ஆர்.பாலுவும் போட்டியின்றி தெரிவாகினர்.

# பட்டாசு ஆலை வெடிப்பு: 7 ஆக உயர்ந்தது பலி!



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே பட்டாசு ஆலையில் நிகழ்ந்த வெடிவிபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். குருங்குடி என்ற கிராமத்தில் உள்ள பட்டாசு ஆலை வெடி விபத்தில் 10 மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

வெடிவிபத்தில் கட்டடங்கள் தரைமட்டமாகி உள்ளன. மீட்புப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. பட்டாசு ஆலை வெடிவிபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

வெடிவிபத்து நிகழ்ந்த கட்டடத்தில் திருவிழாக்களுக்கு பயன்படுத்தும் பட்டாசுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. குருங்குடி பட்டாசு ஆலை வெடி விபத்தின் சத்தம் சுமார் 5 கி.மீ. தூரத்திற்கு கேட்டதாக தகவல் வெளியாகி உள்ளன.

வெடிவிபத்தில் இறந்த 5 பேரும் பெண்கள் என்றும், மேலும் 4 பேர் கவலைக்கிடமாக உள்ளதாகவும் காட்டுமன்னார் கோவில் எம்எல்ஏ முருகுமாறன் தகவல் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பட்டாசு ஆலையில் நிகழ்ந்த வெடிவிபத்தில் பலி எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது. கவலைக்கிடமான நிலையில் இருந்த 4 பெண்களில் 2 பேர் இறந்ததால் பலி எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளது.

குருங்குடியில் நிகழ்ந்த விபத்தில் நாட்டுவெடி தயாரிப்பு ஆலை உரிமையாளர் காந்திமதி உள்பட 7 பேர் பலியாகி உள்ளனர்.

# கேரளாவில் பாடசாலைகள் ஜனவரியில் மீளத் திறப்பு!

## கேரள முதல்வர் பினராயி விஜயன்



கேரள மாநிலத்தில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் பாடசாலைகளை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அம்மாநிலத்தின் முதலமைச்சர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கையின் ஒருபகுதியாக அம்மாநிலத்தின் பாடசாலைகள், கல்லூரிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பாடசாலைகள், கல்வி நிறுவனங்களை மீளத்திறப்பது தொடர்பாக முதலமைச்சர் பினராயி விஜயன் கல்வித்துறை இயக்குநர் மற்றும் அனைத்து மாவட்டகல்விஅதிகாரிகளுடன் காணொலிக் காட்சி மூலம் ஆலோசனை நடத்தினார்.

இதன்போதே மேற்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள முதலமைச்சர் –

தற்போது கேரளாவில் கொரோனா பரவல் அதிகமாக உள்ளது. இந்த நிலையில் பாடசாலைகள், கல்லூரிகளைத் திறந்தால் தொற்று மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

எனவே, மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இறுதி வரை பாடசாலைகளைத் திறக்க முடியாது. மேலும் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் வாரத்தில் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அனைத்து அரசு பாடசாலைகளையும் தயார்ப்படுத்தும் பணி நடைபெறும். கொரோனாப் பரவலைத் தடுக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அனைத்துதரப்பினரும் முழு ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# உலக சுகாதார அமைப்புக்கு செலுத்தும் நிதியை இரத்துச் செய்தது அமெரிக்கா!



ஐ.நா.வின் உலக சுகாதார அமைப்புக்குச் செலுத்த வேண்டிய நிதி நிலுவைத் தொகையை இரத்து செய்வதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்புக்கு அமெரிக்கா செலுத்த வேண்டிய 12 கோடி டொலரில் 5.2 கோடி டொலர் ஏற்கெனவே செலுத்தப்பட்டுவிட்டது.

இந்த நிலையில், 2021 ஆம் ஆண்டுக்குள் அந்த அமைப்பிலிருந்து அமெரிக்கா படிப்படியாக விலகும் திட்டத்தின் ஒரு பகுதியாக, எஞ்சியுள்ள சுமார் 6.8 கோடி டொலரை செலுத்தத் தேவையில்லை என்று ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

எனினும், உலக சுகாதார அமைப்பின் கொவிட் – 19 தடுப்பூசி சர்வதேச ஒத்துழைப்புத் திட்டத்தில் இணையப் போவதில்லை என்று அறிவித்திருந்தாலும், அந்த அமைப்பு செயற்படுத்தும் அமெரிக்க அர சின் போலியோ தொட்டு மருந்து விநியோகம் போன்ற திட்டங்களில் தொடர்ந்து பங்கேற்போம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் (கொவிட் – 19) பெருந்தொற்று விவகாரத்தில் சீனாவைப் பொறுப்பாக்குவதில் உலக சுகாதார நிறுவனம் தோல்வியடைந்து விட்டதாகக் குற்றஞ்சாட்டிய அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப், அந்த அமைப்புடனான அமெரிக்காவின் உறவைத் துண்டிப்பதாகக் கடந்த மே மாதமே அறிவித்தார்.

அமெரிக்காவின் இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பல நாடுகள் கேட்டுக்கொண்டபோதும், உலக சுகாதார நிறுவனத்துக்கு அமெரிக்கா சார்பில் அளிக்கப்பட்டு வரும் நிதி உலகளாவிய பொதுச் சுகாதார தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்று ட்ரம்ப் கூறினார்.

இந்தநிலையில், உலக சுகாதார அமைப்புடனான அமெரிக்காவின் உறவை முடித்துக் கொள்வதாக, கடந்த ஜூலை மாதம் உத்தியோகபூர்வமாக ட்ரம்ப் அறிவித்தார்.

## ரஷ்யாவில் அதிகரிக்கும் கொரோனாத் தொற்றாளர்கள்!

ரஷ்யாவில் ஒகஸ்ட் மாத நடுப்பகுதிக்கு பிறகு நாளொன்றுக்கான கொரோனா வைரஸ் (கொவிட்–19) பெருந் தொற்று அதிகபட்ச பாதிப்பு எண்ணிக்கை பதிவாகியுள்ளது.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் ஐந்தாயிரத்து 110 பேர் பாதிப்படைந்தமையோடு, 121 பேர் உயிரிழந்துள்ளனர் என ர;யாவின் கொரோனா வைரஸ் நெருக்கடியை கண்காணிக்கும் மையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி, 5 ஆயிரத்து 61 பேர் வைரஸ் தொற்றால் பாதிப்படைந்தமைக்குப் பிறகு இன்று (வெள்ளிக்கிழமை) ஐந்தாயிரத்துக்கும் அதிகமான பாதிப்பு பதிவாகியுள்ளது.

கொவிட் – 19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட நான்காவது நாடாக விளங்கும் ரஷ்யாவில், இதுவரை பத்து லட்சத்து 15 ஆயிரத்து 105 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 17 ஆயிரத்து 649 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 709 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுதவிர, வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் எட்டு லட்சத்து 32 ஆயிரத்து 747 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

## வேல்ஸ், ஸ்கொட்லாந்த் தனிமைப்படுத்தல் பட்டியலில் போத்துக்கல்லும் சேர்க்கப்பட்டது

போர்த்துகல்லில் இருந்து வேல்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்திற்கு வரும் மக்கள், இப்போது 14 நாள்களுக்கு சுயமாக தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், இங்கிலாந்து மற்றும் வடக்கு அயர்லாந்தை உள்ளடக்கிய விதிகள் இன்னமும் மாறாமல் உள்ளன. இந்தநிலையில் நாடுகளுக்கு இடையிலான வேறுபாடு குழப்பமானதாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

போர்த்துக்கல், பிரான்ஸ் – பொலினீசியா மற்றும் ஆறு கிரேக்க தீவுகளிலிருந்து வேல்ஸுக்கு வரும் மக்கள் இப்போது 14 நாள்களுக்கு சுயமாக தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

இதேபோல, சனிக்கிழமை 4 மணிக்குப் பிறகு போர்த்துகல் மற்றும் பிரான்ஸ் – பொலினீசியாவிலிருந்து ஸ்கொட்லாந்துக்கு வரும் பயணிகள் 14 நாள்களுக்கு சுயமாக தனிமைப்படுத்த வேண்டியிருக்கும்.

இந்த வார தொடக்கத்தில் ஸ்கொட்லாந்து கிரேக்கத்திலிருந்து வரும் பயணிகளுக்கு இதே போன்ற தனிமைப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை அறிவித்தது.

போர்த்துகலில், ஏழு நாள்கள் தொற்று வீதம் ஒரு லட்சம் பேருக்கு 15.3 லிருந்து 23ஆக உயர்ந்துள்ளது. ஏழு நாள்களில் ஒரு நாட்டின் தொற்று வீதம் ஒரு லட்சம் பேருக்கு 20 தொற்றுக்களை தாண்டும்போது தனிமைப்படுத்தப்பட்ட நிபந்தனைகளை விதிக்க பிரித்தானியா முற்படுகிறது.

நியூஸிலாந்தில் இருந்து சீனாவுக்கு 43 பேர் மற்றும் 6,000 கால்நடைகளுடன் பயணித்த 'வளைகுடா கால்நடை 1' என்ற கப்பலில், பிலிப்பைன்ஸைச் சேர்ந்த 39 பேரும், நியூஸிலாந்தைச் சேர்ந்த இருவரும், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இருவரும் பயணித்தமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்க 76 செல்வந்த நாடுகள் ஒன்றிணைந்தன!

76 செல்வந்த நாடுகள் கொரோனாவுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க ஒன்றிணைந்து செயலாற்றுகின்றன என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகளவில் கொரோனா வைரஸின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. கொரோனா வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க உலகின் பல நாடுகள் ஆராய்ச்சி நடத்தி வருகின்றன.

இந்நிலையில் 76 செல்வந்த நாடுகள் கொரோனாவுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க ஒன்றிணைந்து செயலாற்றுகின்றன என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த ஒருமித்த தடுப்பு மருந்து பரிசோதனைக்கு 'கோவாக்ஸ்' பரிசோதனை எனப் பெயரிடப்பட்டுள்ளது. கோவாக்ஸ் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பு மூன்றாம் கட்ட சோதனைக்குப் பிறகு வெற்றியடைந்தால், பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கு இந்தத் தடுப்பு மருந்து குறைந்த விலைக்கு விற்கப்படும்.

மேலும் இந்த ஆராய்ச்சியில் பங்குகொண்ட நாடுகளுக்கு இலவசமாக இந்த தடுப்பு மருந்து வழங்கப்படும் என ஒப்பந்தம் இடப்பட்டுள்ளது.

76 நாடுகளின் தலைசிறந்த நோய்த்தொற்று விஞ்ஞானிகள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். இது நல்ல பலன் அளிக்கும் என உலக சுகாதார நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஜப்பான், ஜேர்மனி, நோர்வே உள்ளிட்ட பல நாடுகளும் இந்த தடுப்பு மருந்து பரிசோதனைக்கு நிதி அளித்து வருகின்றன.

76 நாடுகள் பட்டியலில் பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகள் இடம்பிடித்துள்ளன. அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து உலக சுகாதார அமைப்பின் கருத்துக்களுக்கு எதிர் கருத்து தெரிவித்து வருகின்றமையால், அமெரிக்கா இந்த நாடுகளுடன் ஒன்றிணையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


## ஜப்பானில் கவிழ்ந்த சரக்குக் கப்பலில் பயணித்த 2 ஆவது நபர் கண்டுபிடிப்பு

தென்மேற்கு ஜப்பானில் கவிழ்ந்த சரக்குக் கப்பலில் பயணித்த இரண்டாவது நபரையும் கண்டுபிடித்துள்ளதாக, ஜப்பானிய கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

அமாமி ஓஷிமா தீவின் வடமேற்கு திசையில் சுமார் 120 கிமீ (75 மைல்) தொலைவில் காணப்பட்ட இரண்டாவது நபர், வெள்ளிக்கிழமை மயக்கமடைந்த நிலையில் தண்ணீரில் இருந்து இழுத்துச் செல்லப்பட்ட போது அவரை மீட்டனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், அவர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போது இறந்துவிட்டார் என, ஜப்பானிய கடலோர காவல்படை குறிப்பிட்டுள்ளது.

இறந்த குழு உறுப்பினர், ஜப்பான் நேரப்படி வெள்ளிக்கிழமை காலை 6:30 மணியளவில் தண்ணீரில் மூழ்கி இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அவர் அமானி தீவில் இருந்து 120 கி.மீ தூரத்தில் காலை 7:16 மணிக்கு மீட்கப்பட்டார் எனக் கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.



அதே பகுதியில் இருந்து ஒரு பாதுகாப்பு அங்கி மற்றும் கால்நடை சடலங்களும் கண்டெடுக்கப்பட்டன. மேலும் 41 குழு உறுப்பினர்களுக்கான தேடல் தொடர்வதாக கடலோர காவல்படை குறிப்பிட்டுள்ளது.

வார இறுதியில் ஒரு சக்திவாய்ந்த சூறாவளி வருவதால் உயிர் பிழைத்தவர்களுக்கான தேடல் தடைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வறுமை நிலைக்குள் 4.7 கோடி பெண்கள்!

### ஐ.நா. எச்சரிக்கை



கொரோனா வைரஸ் (கொவிட் – 19) நெருக்கடி காரணமாக, உலகம் முழுவதும் 4.7 கோடி பெண்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

இந்த நிலையிலிருந்து கொவிட் – 19 நெருக்கடிக்கு முன்பிருந்த நிலைக்கு முன்னேற்றமடைய 2030 ஆம் ஆண்டு வரை காத்திருக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.வின் பெண்கள் மேம்பாட்டு நலப் பிரிவு (யு.என்.டி.பி) வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

பெண்களிடையான வறுமை வீதம், 2019 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டுக்குள் 2.7 சதவீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கொவிட் – 19 நோய்த்தொற்று பரவல் நெருக்கடி காரணமாக பெண்களின் வறுமை வீதம் 9.1 சதவீதம் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கொவிட் – 19 நெருக்கடியின் விளைவுகளால் 2021 ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதும் கூடுதலாக 9.6 கோடி பேர் மிக வறுமையான நிலைக்குத் தள்ளப்படுவர். அவர்களில் 4.7 கோடி பேர் பெண்கள் மற்றும் சிறுமியர்களாக இருப்பார்கள்.

இதன் மூலம், உலகில் வறுமையில் வாடும் பெண்களின் எண்ணிக்கை 43.5 கோடியாக அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

